செ.வெ.எண்.653/2023 நாள்: 17.11.2023

## பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தலின்படி மாணவர்கள் உயர்கல்வி தங்கு தடையின்றி பயில்வதற்கு ஏதுவாக, அரசு நிதித்துறை செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாணவர்களுக்காக கல்விக்கடன் மேளா நடத்துவதற்கு ஏதுவாக, மாநில கண்காணிப்பு அலுவலர் திரு.வணங்காமுடி அவர்களின் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தெ.பாஸ்கரபாண்டியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 16.11.2023 அன்று மாலை பல் துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மேற்கொள்ளப்பட்டு, இதன் தொடர்ச்சியாக வரும் 24.11.2023 அன்று மாணவர்களுக்கான மெகா வங்கி கல்விக்கடன் மேளா நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டு அதிகப்படியான மாணவர்களுக்கு உயர் கல்வி பயில்வதற்கான கல்வி கடன் வழங்குவதற்கு ஏதுவாக அனைத்து வங்கியாளர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் அன்று காலை 10 மணியளவில் நடத்தப்பட உள்ளது. இதில் மாணவர்கள் பங்கேற்கும்வகையில் **வித்யாலட்சுமி செயலியில் பதிவேற்றம் செய்து கொள்ளவும்.**

மேலும் அன்றைய நாளில் நேரடியாக இந்த மெகா கல்வி கடன் முகாமில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் கலந்துகொள்ளும் நிலையில் இந்தசிறப்பு முகாமில் மாணவர்கள் பங்கேற்பதற்கு ஏதுவாக ஆதார் அட்டை, பேன் கார்டு(மாணவர் மற்றும் பெற்றோர்), போனோபைட் சான்றிதழ், பீஸ் ஸ்ட்ரக்சர், மாணவர் கல்லூரியில் சேர்ந்ததற்கான கடிதம், 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல், மாற்று சான்றிதழ், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் வருமான சான்றிதழ், புகைப்படம், வங்கி கணக்கு எண், தொலைபேசி எண் மற்றும் இ.மெயில் ஐடி ஆகிய ஆவணங்களுடன் மாணவர்கள் வங்கி கல்வி கடன் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தெ.பாஸ்கரபாண்டியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர்.**